19.09.2025 OS.No.246/2023 DW2 Name :.**கவிதா**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. என் தகப்பானர் இறக்கும்போது அவருக்கு வயது சுமார் 80 இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பானர் இறப்பதற்கு முன் எந்தெந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றார் என்பது எனக்கு தெரியாது. என் தகப்பானர் இறப்பதற்கு முன் சுமார் 1 ஆண்டுகளாக காலில் இருந்த காயத்திற்காக சிகிச்சை பெற்று வந்தார். அவ்வாறு சிகிச்சை பெற்றதற்கு என்னிடம் ஆதாரங்கள் எதுவும் இல்லை. என் தகப்பானர் இறக்கும்வரை அவருக்கு சொந்தமான வீட்டில்தான் குடும்ப உறுப்பினர்களுடன் குடியிருந்தார்.
2. என் தகப்பானர் கிராம உதவியாளர் இருந்து ஓய்வு பெற்று சுமார் 30 ஆண்டுகள் உயிருடன் இருந்திருப்பார் என்றால் சரியல்ல. என் தகப்பானருக்கு ஓய்வூதியம் இல்லை. என் தகப்பானரின் சம்பளம் வழக்கு சொத்தில் இருந்து கிடைத்த வருமானம் ஆகியற்றை கொண்டு வந்து குடும்பம் நடத்தி வந்தார். என் தகப்பானரின் வருமானத்தை நம்பி தான் என் தாயார் வாழ்ந்து வந்தார். நான் உடன் இருந்து பார்த்து வந்தேன். என் தகப்பானர் இருந்த வீடு நான் இருந்த வீட்டிலிருந்து சுமார் 10 நிமிடத்தில் செல்லும் தொலைவில் தான் உள்ளது.
3. என் தகப்பனாரருக்கு பாத்தியபட்ட சர்வே எண். 1/14 நிலத்தில் வடக்கிழக்கு மூளையில் கிணறு உள்ளது. அதை நானும் என்னுடைய என் தகப்பானரும் சேர்த்து உருவாக்கினோம். அந்த கிணற்றிலிருந்து

தான் தண்ணிர் மூலமாக தான் என் தகப்பானர் விவசாயம் செய்தார். என் தகப்பானர் உயிருடன் இருக்கும் காலம்வரை அந்த கிணற்றிக்கு பம்புசெட் மின் இணைப்பு இல்லை. அதற்கு மின் இணைப்பு நான்தான் வாங்கினேன். எப்போது என்று நியாபகம் இல்லை.

4. மின் இணைப்பு வேண்டும் என மின்வாரியத்திற்கு எப்போது மனு கொடுத்தேன் என்று நியாபகம் இல்லை. மனு கொடுத்து எவ்வளவு காலத்திற்கு பின் மின் இணைப்பு வந்தது என்று நியாபகம் இல்லை. மின் இணைப்பு எண், மின்திறன் குறித்து எதுவும் தெரியாது. அதற்கு ஆவணங்கள் உள்ளது. என் தகப்பனாருக்கு பாத்தியபட்ட சொத்திற்கு கிழக்கில் புறம்போக்கு பூமி உள்ளது என்றால் மேற்கில் தான் உள்ளது.
5. கிழக்கில் கண்ணன் என்பவருடைய நிலம் உள்ளது. வடக்கில் மகாராஜன் என்பவர் நிலம் உள்ளது. தெற்கில் மற்ற ஒருவர் நிலம் உள்ளது பெயர் நியாபகம் இல்லை. அந்த நிலத்தில் வண்டி வழி போகிறது. தற்போது கொஞ்ச நாட்களாக தான் அது போகிறது. வண்டிவழிக்கு வடக்கில் என் தகப்பனாருக்கு பாத்தியபட்ட 3 ஏக்கர் சொத்து உள்ளது. மின்சார இணைப்பு பெறுவதற்கு வீட்டு முகவரி ஆவணம் மட்டும் தான் கொடுத்தேன். ரேஷன் கார்டு மட்டும் தான் கொடுத்தேன்.
6. அந்த நேரத்தில் சொத்திற்குண்டான பட்டா என் தகப்பனார் பெயரில் இருந்தது. ரவி, சேகர் இருவரும் வடக்குப்பட்டு கிராமத்தில் குடியிருந்தார்கள் என்றால் சேகர் மட்டும் தான் குடியிருந்தார். சிவக்குமாரும் அசோகனும் வேலை நிமிர்த்தமாக வெளியூரில் இருந்தார்கள் என்றால் ரவியும் வெளியூரில் தான் இருந்தார்

கோவிந்தராஜீம் வெளியூரில் தான் இருந்தார். ரவி, கோவிந்தராஜ் இறந்துவிட்டார்கள். வாணியம்பாடி முனிசிப் கோர்ட்டில் அசோகன் என்மீதும் என் கணவர் மீதும் அ.வ. எண். 117/2012 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

7. அந்த வழக்கில் சொத்து எனக்கு பாத்தியபட்டது என நான் பதில் போட்டுள்ளேன். அந்த வழக்கு உரிமை பிரச்சனை உள்ளதால் வழக்கை வழியுறுத்ததால் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யபட்டது. அந்த வழக்கில் என் பெயரில் ஏற்பட்டதாக கூறும் உயில் ஆவணத்தில் ஜெராகஸ் தாக்கல் செய்தேன். அந்த ஜெராக்ஸ் நகலின் ஜெராக்ஸ் எடுத்து தான் இந்த வழக்கில் தாக்கல் செய்தேன். என் அப்பா இறந்து 15 நாட்கள் கழித்து காரியத்தின்போது உயில் பற்றி தெரிந்துக்கொண்டேன். அதன் பின் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் போட்டு வாங்கினேன்.

8. அது என்னிடம் உள்ளது. என் பெயரில் உள்ள பட்டா 2013ல் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் முனிசிப் கோர்ட்டில் என்மீது போட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. பட்டா வாங்கியது தொடர்பான அனைத்து விவரங்களும் என் கணவருக்கு தான் தெரியும். என் அம்மா காட்டியதால் உயில் பற்றிய விவரம் எனக்கு தெரியும். என் தாயார் என்னிடம் காட்டிய உயில் ஆவணம் வீட்டில் உள்ளது. அந்த உயில் ஆவணத்தை முனிசிப் கோர்ட்டில் நடந்த வழக்கிலும் இந்த வழக்கிலும் தாக்கல் செய்யவில்லை.

9. உயில் ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்பதை நான் படித்து பார்க்கவில்லை. என் தாயார் கொடுத்த ஆவணத்தை வேறு எங்கும் காட்டாமல் எந்த நீதிமன்றத்திலும் தாக்கல்

செய்யாமல் நான் வைத்துள்ளேன். உயில் ஆவணத்தில் கிணறு பம்புசெட் தொடர்பான விவரங்கள் இல்லை என்றால் கிணறு பற்றிய விவரம் உள்ளது.

10. என் தகப்பனார் அவருடைய காலத்திற்கு பின் சொத்து குறித்து எந்த பிரச்சைனையும் வரக்கூடாது என்பதற்காக தான் பத்திரம் எழுதும் முடிவுக்கு வந்தார். எனக்கு எழுதியதாக கூறப்படும் உயில் ஆவணத்தில் 2 ஏக்கர் சொத்து மட்டும் தான் குறிப்பிடபட்டுள்ளது மீதியுள்ள சொத்து மற்றும் வீடு குறித்து அதில் இல்லை. மீதியுள்ள 1 ஏக்கரில் 15 செண்ட்யையும் எனக்கு எழுதி கொடுத்துள்ளார். உயில் ஆவணத்திற்கு பின் அதை எழுதிகொடுத்துள்ளார் என்பது என் கணவருக்கு தான் தெரியும். 15 செண்ட் சம்மந்தமான ஆவணமும் வீட்டில் உள்ளது. அந்த ஆவணம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

11. 15 செண்ட் சம்மந்தமான ஆவண விவரத்தை இந்த வழக்கிலும் ஏற்கனவே நடந்த வழக்கிலும் சொல்லியுள்ளேன். வழக்கில் கூறியுள்ள வழி ரோட்டில் சென்று முடிகிறது. நடுவில் நிறைய பேரு சொத்து உள்ளது. அந்த ரோடு உட்பட என் தகப்பனாருக்கு பாத்தியபட்ட 3 ஏக்கர் சொத்து ஆகும். என் தகப்பனாருக்கு சொந்தமான சொத்திற்கு கிழக்கில் புறம்போக்கு சொத்துதான் உள்ளது என்றும் அதன் சர்வே எண். 1/1 என்றும் சொன்னால் சரியல்ல. 3 ஏக்கர் சொத்திற்கு மேற்கில் கிருஷ்ணனுக்கு சொந்தமான சர்வே எண் 1/10 மற்றும் 86 சொத்து உள்ளது என்றால் நியாபகம் இல்லை.

12. வடக்கில் சர்வே எண் 1/11 ராஜி சொத்தும் 1/12 முருகேசன் சொத்தும், 1/13 ராஜேந்திரன் சொத்தும் உள்ளது என்றாலும் தெற்கில் 1/18

குள்ளயன் சொத்து உள்ளதும் என்றாலும் எனக்கு தெரியாது. கிழக்குபுறம் கிருஷ்ணன் என்பவருக்கு எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் என் பெயருக்கு எந்தவொரு உயில் ஆவணம் எழுதி வைக்கவில்லை என்றும் அவ்வாறு எழுதி வைக்கவேண்டிய எண்ணமும் இல்லை என்றும் அதற்கான மனநிலை உடல்நிலையில் என் தகப்பனார் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

13.வழக்கில் நான் கூறியுள்ள உயில் ஆவணம் உண்மையானது கிடையாது என்றும் நானும் என் கணவரும் சேர்ந்து தயாரித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் பொது கூட்டு குடும்ப சொத்து என்று சொன்னால் சரியல்ல. அதில் வாதிகளுக்கு உரிய பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 19/09/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.09.19 17:31:37 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.